RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s862

# தமிழ் இசை வளர்ச்சியில் பஞ்சமரபின் பங்களிப்பு

**த. வாகீசன்** [அ, *]

[அ] கர்நாடக இசைத்துறை, சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

# The Contribution of the Pancha Marabu (Five Traditions) to the Development of Tamil Music

**T. Vaheesan** [a, *]

[a] Department of Carnatic Music, Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka

* Corresponding Author: vaheesan80@gmail.com

Received: 09-04-2021
Revised: 11-06-2022
Accepted: 19-06-2022
Published: 20-08-2022

Check for updates

## ABSTRACT

The Tamils have many unique features of their own. Among them is Tamilisai (Tamil Music). Since the Sangam period, many books have contributed to the development of Tamil and Tamil Music. In that sense, the Pancha Marabu contains much information, such as Tamil music, dance, musical instruments, etc. Accordingly, in this book, scholars have developed Tamil music through musical traditions, vachchiya traditions, nritya traditions, abhinaya traditions, and taala traditions. The book Pancha Marabu has been written in such a way as to document and educate the younger generation about how Tamil music has helped in its development. This study has been examined in terms of the introduction of the book, the period of its origin, the structure of the book, and the subdivisions. The research has been done through descriptive and historical research methodologies.

**Keywords:** Tamil Music, Sangam Period, Pancha Marabu, Musical Tradition

## முன்னுரை

சங்ககால இசைச் சிறப்பினை எடுத்து கூறும் நூல்களாக தொல்காப்பியம், பஞ்சமரபு, சிலப்பதிகாரம் என்பன ஆகும். பஞ்சமரபு நூலின் மூலம் தமிழரது இசை, நடனம், இசைக்கருவிகள், தாளங்கள் என்பவற்றின் தொன்மை, வரலாறு, என்பன இன்றுவரை போற்றப்பட்டு வருகின்றன. தமிழரது இசையை கூறிய பெருங்குருகு, பஞ்சபாரதீயம், போன்ற நூல்கள் இன்று காணாமல் போய்விட்டன. எஞ்சியுள்ள பஞ்சமரபு போன்ற அரிய இசை நூல் தமிழ் இசை வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளமையை எதிர்கால சமுதாயத்தினருக்கு எடுத்து இயம்புவகையில் இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இது விபரண, வரலாற்று ஆய்வு முறையியல்களுக்கூடாக ஆராயந்து எழுதப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லாரது உரையானது பழம்பெரும் 5 நூல்களின் செய்யுட்களை கொண்டு எழுதப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு: சிகண்யாரின் இசைநுணுக்கம், யாமளேந்திரனின் இந்திரகாளீயம், அறிவனாரின் பஞ்சமரபு, ஆதிவாயிலோரின் பரதசேனாபதீயம், பாண்டியன் மதிவாணனின் நாடகத் தமிழ் என்பன ஆகும். பஞ்சமரபின் பாயிரவியலில் சேரை அறிவனார் செய்து அமைத்து ஐந்துதொகை என்னும் 5வது செய்யும் மூலம் பஞ்சமரபு என்ற நூலை எழுதிய அறிவனார் சேரை என்றும் இடத்தைச் சேர்ந்தவர் என்ற குறிப்பு

கிடைக்கிறது. பஞ்சமரபின் முதற்பதிப்பு வித்வான் வி. ஆர். தெய்வசிகாமணிகவுண்டர் கொண்டார். அவர்களால் 1975இல் வெளியிடப்பட்டது. நூலின் முன்னுரையில் குறிப்பிட்டது போல் நூலாசிரியர் இரு நூல்களை எழுதியிருக்கிறார் எனத் தெரிகிறது. அவை பனுவல்தொகை, ஐந்தொகை இருநூல்களின் விபரங்களையும் பஞ்சமரபில் குறிப்பிடப்பட்டுள்ளது எனலாம் (Angayarkanni, 2010).

## பஞ்சமரபின் காலம்

அறிவனார் திருமாறன் என்னும் அரசரின் பெயரைக் குறிப்பிடுகின்றார். இந்நூலின் பல செய்யுட்களைச் சான்றாக கொள்ளும்போது இந்நூலின் காலமானது திருமாறனின் காலத்தைச் சேர்ந்து என நிரூபணமாகிறது.

1. "மன்ன திருமாற வண்கூடர் கோமானே!" (யாழ்மரபு)
2. "மணிமாடம் ஓங்கும் மதுரையார் கோவே!" (வகையொழிபு மரபு)
3. "இந்து வழிவந்த மாறா! வழுதியார் கோவே!" (வகையொழிபு மரபு)

முதல் திருமாறன் இரண்டாம் சங்கத்தின் இறுதியிலும், மூன்றாம் சங்கத்தின் ஆரம்பத்திலும் இருந்தவர் ஆகையால், இந்த நூல் சங்கக் காலத்தைச் சேர்ந்தது எனலாம் (Angayarkanni, 2010).

## நூலின் அமைப்பு

இந்நூலின் 5 பெரும் பிரிவுகள் காணப்படுகின்றன அவையாவன:

இசைமரபு, வாச்சியமரபு, நிருத்தமரபு, அபிநயமரபு, தாளமரபு

என்பனவாகும். இந்நூலில் இசைமரபு, வாச்சியமரபு, நிருத்தமரபு, அபிநயமரபு, தாளமரபு, என மரபுமுறை கூறுப்பெறுவதால் பஞ்சமரபு என்றும் பெயர்முறை தெரிகிறது. இசைமரபில் யாழ்மரபு, வங்கியமரபு, கண்டமரபு, பற்றி நன்கு கூறப்பெறுகிறது.

"ஆதி யயன்படைத்த வாழி - யுலகத்து

ளோதிய கீதவழி யெல்லாம் - நீதியினால்

லைந்து திறனும் விரலி வருவதலாற்

பஞ்ச மரபென்று பார்"

இந்நூல் 240 வெண்பாவால் முற்றப்பெற்றது. எனப் பாயிரவுரை கூறுகின்றது. நூல் 'ஆடுஉ' முன்னிலையாகவும், 'மகடூஉ' முன்னிலையாகவும் பாடப்பெற்றுள்ளது (Arivanaar, 1973).

## இசை மரபு

பஞ்சமரபு நூலின் பெரும் பிரிவுகள் 05 ஆகும். அவற்றில் முதலாவது பிரிவு இசைமரபு ஆகும். இது 05 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு உள்ளது. யாழ்மரபு (String (Instument)) இவங்கியமரபு (wingInstument), கண்டமரபு (Vocal), நிருத்தமரபு (Musical Forms), வகையொழிவுமரபு (Miscelloneous).

## யாழ் மரபு

இந்த உட்பிரிவில் யாழைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. யாழின் வகைகள், இதை உருவாக்கப்பட்ட பயன்பட்ட மரம், யாழின் பகுதிகள், ஒவ்வொரு யாழிற்கான தந்தியின் எண்ணிக்கை. அதை இசைக்கும் முறை நாற்பெரும் பண்களின் பிறப்பு. வலமுறையில் ஏழ்பெரும் பாலைகளின் பிறப்பு, 103 பண்கள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. யாழ்வகைகள் பின்வரும் செய்யுட்களில் விளக்கப்பட்டுள்ளது.

“பேரியாழ் பின்னு மகரந் சகோடமுடன்
சீர்பொலி செங்கோடு செப்பினராற் - ருர் பொலிந்த
மன்ன திருமாற வண் கூடற் கோமானே
யின்ன முளவே சில”

103 பண்களை விளக்கும் செய்யுள் பின்வருமாறு:

“பண்ணோர் பதினேழாம் பண்ணியம் பத்தேழாம்
எண்ணுந் திறமிரண்டும் பத்தென்ப - நண்ணிய
நாலாந் திறத்திறமோர் நான்கு முனைப்பட்டம்
பாலாய பண்ணூற்று மூன்று”

யாழ்மரபினை தொடர்ந்து வங்கிய மரபினை பார்ப்போமாயின்,

## வங்கிய மரபு

“ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கலமே
பாங்குடைச் செங் காலி கருங்காலி - பூங்குழலாய்
கண்ண றுவந்த கழைக்கிவை யாமென்றார்
மண்முழுது நாலுணர்ந்தோர் வைப்பு.”

மேலே கூறப்பட்ட பாடல்வரிகள் வங்கிய மரபில், மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலிமரம், கருங்காலிமரம் ஆகியவை புல்லாங்குழல் ஒன்றை உருவாக்குவதற்கும் பயன்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் மூங்கில் மரத்தை உபயோகிக்கும்போது அதன் தரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனை பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மரம் மிக புதிதாகவோ அல்லது மிகப் பழையதாகவோ இருக்கக் கூடாது. அவை ஒரு நூற்றாண்டு பழமையானதாகவும் நல்ல மண் வளத்தில் வளர்ந்ததாகவும் நால் திசைக்காற்றால் பாதிக்கப்படாததாகவும் இருத்தல்வேண்டும். நல்ல மரத்தைத் தேர்ந்து எடுத்து அதை ஒரு வருடத்திற்கு நிழலில் வைத்திருக்கவேண்டும். இவ்விதச் செய்திகள் பஞ்சமரபின் செய்யுட்களில் கூறப்பட்டுள்ளன. புல்லாங்குழலின் அளவும், நீளமும் மற்றும் விட்டமும் இநநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. புல்லாங்குழல் ஏழு விரல்கள் கொண்டு வாசிக்கப்படுகிறது. இடது கரத்தின் பெருவிரல் மற்றும் சிறுவிரல் தவிர மற்ற மூன்று விரல்கள் பயன்படுத்தப்படுகின்றன. வலது கரத்தின் பெருவிரல் தவிர மற்ற விரல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு வங்கிய மரபில் கூறப்பட்டுள்ளது (Arivanaar, 1973). அடுத்து கண்ட மரபினை எடுத்து நோக்கும்வோமாயின்.

## கண்ட மரபு

மனித உடலில் இருந்து வெளிப்படும் இசை ஒலியைப் பற்றி இசைமரபின் உட்பிரிவான கண்டமரபு தெளிவாகவிளக்கியுள்ளது எனலாம். மனித உடல் ஐந்து கூறுகளைக் கொண்டது என அறிவனார் கூறுகிறார் (பஞ்சபூதங்கள்) நாதம் மூலாதாரத்திலிருந்து பிறந்து, உடலின் எட்டு நிலைகளைக் கடப்பதாக இந்த மரபில் கூறப்பட்டுள்ளது. உடலில் உள்ள 10 நாடிகள் விளக்கப்பட்டுள்ளன.

“மண்ணுடனீர் நெருப்புக் கால்வான மென்றிவைதாம்,
எண்ணிய பூதங்க ளென்றறிக, நண்ணிய
மன்னர்க்கு மண்கொடுத்து மாற்றார்க்கு விண்கொடுத்த

தென்னர்கோ மானே தெரி"

இங்கு ஈராக ஆலாபனை (ஆளத்தி) பாடும் முறைமைப்பற்றியும் எடுத்து இயம்பப்பட்டுள்ளது எனலாம் (Arivanaar, 1973). ஆளத்தி என்பது, உயிரெழுத்து, மெய்யெழுத்து என்பன பயன்படுத்தப்படும் இது நாபிலிருந்து இடை மற்றும் பிங்கலை எனும் காற்றுக் குழாய்கள் வழியாக எட்டு நிலைகளை தொட்டுப் பிறக்கிறது. ஒருவர் ஆளத்தியைப் பாடும்பொழுது குறில் மற்றும் நெடில் எழுத்துக்களைபயன்படுத்தவேண்டும். இவை அச்சு மற்றும் பாரணை என்று பெயரிடப்பட்டுள்ளன. அச்சு குறில் எழுத்துடனும், பாரணை கூத்துடனும் (னுயnஉந) இணைகிறது. ஆளத்தி பாடுகையில் தென்னா, தெனா, தென்னாத்தெனா, (குறில் எழுத்துக்கள் -(அ, இ, உ, எ, ஒ) நெடில் எழுத்துக்கள் (ஆ, ஈ, ஊ, ஏ, ஓ) 18 மெய் எழுத்தக்களில் ம, த, ந, மட்டுமே பயன்படுத்தலாம். மற்றவை பயன்படுத்தக் கூடாது என்பதனை கீழ்வரும் செய்யுள் விளக்கி நிகழ்கின்றது.

"குன்றாக் குறில் ஐந்தும் கோடா நெடில் ஐந்தும்

நின்றார்ந்த மந்நகரத் தவ்வொடு- நன்றாக

நீளத்தால் எட்டும் நிதானத்தால் நின்று இயங்க

ஆளத்தி என்றறி"

மற்றும் ஆளத்தி 03 வகைப்படும் எனவும் கூறப்படுகிறது (Angayarkanni, 2010). அவையாவன:

காட்டாளத்தி (தாளத்துடன் பாடப்படும்), நிறவாளத்தி (கூத்துடன் பாடப்படும்), பண்ணாளத்தி (பண்ணை முக்கியமாக கொண்டது)

கண்ட மரபினை தொடர்ந்து நிறுத்த ஃ திருத்த மரபினை எடுத்து நோக்குவோமாயின்.

நிருத்த ஃ திருத்த மரபு

திருத்த மரபில் கேந்திராங்கம் (ஆதி), (புருவம்), சுத்தம், சாளவம், சங்கீர்ணம், தமிழ் என்ற 5 பெயர்களும் நிறம் எனப்படும். இதனை அறிவனார் பின்வருமாறு கூறுகிறார்.

"ஆதியுடன் சுத்தஞ் சாளவஞ்சங் கீரணம்

ஏதமில்சீர்க் செந்தமிழோ டிவ்வைந்தும் - பேதமே

பாடற் பகுதி பல நிறம் பேசினார்

கோடி மொழி நூலோர் குறித்து"

இவை எதைக் குறிக்கின்றது என்று புரிந்து கொள்ள இயலாது. ஆனால் நிறங்களில் பேதங்களினால் பல விதமான பாடல்வகைகள் உருப்பெறுவதாக நூலாசிரியர் விளக்குகிறார். உதாரணமாக உரு, வண்ணம், தேவபாணி, ஆகியவை ஆகும். மேலும் நூலாசிரியர் இந்த பகுதியில் பண்ணுக்கான விளக்கம், பண்களின் பெயர்கள், பாடும் முறை, பாடுகையில் தவிர்க்கவேண்டிய பயன்படுத்தக்கூடாத பொருட்கள் பற்றிய விளக்கும் என்பன திருத்த மரபில் கூறப்படுகின்றது (Arivanaar, 1973).

## வகையொழிவு மரபு

வகையொழிவு மரபு என்பது நூலாசிரியர் புத்தகத்தின் தலைப்பிற்கான காரணத்தைக் கூறுகிறார். முதல் காரணம் பஞ்ச சப்தம் ஆகும். இந்நூல் ஐந்து ஒலிகளைப் பற்றி விளக்குவதால் பஞ்சமரபு எனக் கூறப்படுகிறது. அவையாவன: தோற்கருவி, காற்றுக் கருவி, கஞ்சக்கருவி, நரம்புக் கருவி, கண்டம்ஃமிடறு, இந்நூலின் மற்றொரு பெயர்க்காரணம். இந்நூலின் இசை (Music), முழவு (Petcussion instrument), தாளம் (time unit), கூத்து (Foot-work of dance), அவினயம் (dance gestures and poses), போன்ற 5 அதிகாரங்களை கொண்டுள்ளன மற்றும் சிந்து, திரிபறை, சவலை, சமபாதம், செந்துறை, வெண்துறை,

தேவபாணி, மற்றும் வண்ணம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது எனலாம். அடுத்த பெரும்பிரிவான வாச்சிய மரபினை எடுத்து நோக்குமாயின்,

## வாச்சிய மரபு

இது மூன்று உட்பிரிவுகளைக் கொண்டஉள்ளது, அவையாவன: 1.முழவு மரபு, 2. பிண்ட மரபு, 3. எழுத்து மரபு. இப்பகுதியில் தாளவாத்தியத்தை பற்றியும் அவற்றின் பல பெயர்கள் பற்றியும், குறிப்பு உள்ளது. வாத்தியத்தின் அளவு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வாத்தியத்தை வாசிக்கும் முறை, வாத்தியத்தில் வாசிக்கும் சொற்கள் (ஆதிகள்) மற்றும் பலவித வாத்தியங்களின் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

## முழவு மரபு

இதில் தாள வாத்தியத்தில் வகைகள் அதன் தொழில்முறை அம்சம். அதில் உள்ள நுணுக்கங்கள், வாத்தியத்தை எந்த கடவுளுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. ஆகியவை இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்து பிண்டபரவினை நோக்கும்போது,

## பிண்ட மரபு

இப்பகுதியில் தாளவாத்தியங்கள் எந்த மரத்தைக் கொண்டு செய்யப்படுகின்றன என்பதும் அவற்றின் அளவு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. அடுத்து எழுத்து மரப்பினை எடுத்துநோக்கும்போது,

## எழுத்து மரபு

தாளவாத்தியற்கான சொற்கட்டு சொற்கட்டை குறிப்பதற்கான எழுத்துக்களை ஆகியவை இப்பகுதியில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வாச்சியமரபு கூறுகிறது (Girikumar, 2015).

## முடிவுரை

சங்ககாலத்தில் எழுந்த நூல்களில் பஞ்சமரபு மிகவும் இன்றியமையாத, பிரபல்யமான இசை நூலாகும். இன்று வரை தமிழர் இசை வீறுநடை போடுவதற்கு பஞ்சமரபில் கூறப்படுகின்ற இசைக்கருவிகள், மனித குரல் இசையின் பங்களிப்பு, நிலை, பலவிதமான பாடல்வகைமைகள், 103 பண்கள், இராகம் பாடும் முறைமைகள், தாளக்கருவிகளின் வகைகள், சொற்கட்டுக்கள் என ஏராளமான இசைநுட்ப விடயங்கள் கூறப்பட்டுள்ளன. இந்நூல் போன்ற நூல்கள் எம்மத்தியில் இளம் சந்ததியினர் மத்தியில் எடுத்து நோக்குவது குறைவு. இவற்றை எடுத்து புதிய புதிய ஆய்வுகளை செய்யும்போது ஏராளமான தமிழர்களின் தமிழ் இசையின் தொன்மை, பெருமைகள் ஏராளமாக எமக்கு கிடைக்கும். மற்றும் தமிழர்களது அரிய நூல்கள் எம்மத்தியில் விட்டு மறைந்துவிட்டன. பஞ்சமரபு எனும் நூலினை தெய்வசிகாமணி புலவரால் ஆவணப்படுத்தியிருக்காவிட்டால் எமக்கு இவ்விசைச் செய்திகள் கிடைத்திருக்காது. ஆவணப்படுத்துதல் என்பது ஒவ்வொரு மக்களதும் முக்கியமான கடமை எனலாம். எனவே பஞ்சமரபு தமிழரது தொன்மையான தமிழ் இசையை பரப்புகின்ற இசை நூலாகும். சங்ககால கடைச்சங்கத்தில் தோன்றிய இந்நூல் இன்றுவரை தமிழ் இசை உலகின் பொக்கி~மாக போற்றப்படுகின்றது எனலாம்.

## References

Arivanaar, (1973) Panchamarupu Moolamum Uraiyum, Sakthi Aranilai Viliyeedu, Chennai, India.

Angayarkanni, E., (2010) Isai Varalaru-Tamil Marapu, Postgraduate degree, Madras University, Chennai, India.

Girikumar, N., (2015) Isaiyiyal Isai varalaru – Tamil Marapu, Postgraduate degree, Annamalai University Distance education, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License